# சரசாலைக் கிராமத்தின் மறக்கப்படாத மரபுரிமை அம்சங்கள் – ஓர் ஆய்வு

**கிருத்திகா, சி., புஸ்பரட்ணம்.ப**
வரலாற்றுத்துறை (தொல்லியல்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
kirikirish10@gmail.com

மரபுரிமையானது ஓர் குழுவால், சமூகத்தால் பின்பற்றப்பட்டதும், நிகழ்காலத்தில் தொடர்ந்து பராமரிக்கப்படுவதும், எதிர்காலத்தில் அடுத்த சந்ததியினருக்கு கொடுக்கப்பட வேண்டியதுமாகும். இம்மரபுரிமைகள் கடந்த காலத்தை பற்றி அடையாளப்படுத்துப வையாய் உள்ளன. பொதுவாக 100 வருடங்களுக்கு மேற்பட்ட அனைத்தும் மரபுரிமை வளங்களாக அடையாளப்படுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ஒவ்வொரு நாடும், ஒவ்வொரு பிரதேசமும் தமக்கே உரிய, தனித்துவமான பல்வேறு மரபுரிமை அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றன. இம்மரபுரிமை அம்சங்கள் ஒரு சமுதாயத்தின் உண்மையான வரலாற்றை எடுத்துக் கூறுவதாய் உள்ளன. இவை இயற்கை மரபுரிமை, கலாசார மரபுரிமை என இரண்டாக வகைப்படுகின்றன. இயற்கையாக அமைந்த அம்சங்கள் இயற்கை மரபுரிமையாகவும், நினைவுச்சின்னங்கள், கட்டிடங்கள், வரலாற்று சின்னங்கள், தொல்பொருட்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள், கலையம்சங்கள் போன்றன கலாசார மரபுரிமையாகவும் அமைகின்றன. இத்தகைய மரபுரிமை அம்சங்கள் ஒரு இனக்குழுவின், சமுதாயத்தின் வாழ்வியலைப் பிரதிபலித்தல், கடந்த காலத்தை அறிந்து எதிர்காலத்தைக் கட்டி எழுப்ப உதவுதல், ஒரு இடத்தின் வரலாற்றுப் பெறுமதியை அதிகரித்தல், மூதாதையினரின் கடந்தகால வாழ்க்கை முறை, கலையம்சங்கள் பற்றி அறிய முடிதல், ஒரு இனம், சமூகம் தனது நிலைத்திருத்தலை உறுதிப்படுத்துதல், சுற்றுலாத் துறையின் விருத்திக்கு முதுகெலும்பாக அமைதல், சமூக ஒருங்கிணைப்பு, பல்லினப் பண்பாடு, தேச, கலாசார ஒருங்கிணைப்புக்கு உதவுதல் போன்ற காரணங்களால் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றன. இம்மரபுரிமை அம்சங்களானவை நகர்ப்புற வாழ்க்கை முறை, அரசின் அசமந்த போக்கு, தொழில்நுட்ப சாதனங்களின் அபரிமிதமான வளர்ச்சி, மக்களிடையே மரபுரிமை சின்னங்கள் தொடர்பான விழிப்புணர்வு காணப்படாமை, பாரம்பரிய பொருட்களை உபயோகிப்பது அநாகரிகமானது எனக் கருதுதல், வெளிநாட்டு பண்பாடு, பாரம்பரியம் மீதான மோகம், போதிய அளவு நேரமின்மை, பொருளாதார மேன்மை, கல்வி நிலை உயர்வு, அரச சார்பற்ற உத்தியோகங்களில் பணிபுரிதல், பாரம்பரிய மரபுரிமை சின்னங்கள் பாவனைப் பொருட்களை விலைக்கு விற்றல், மக்கள் இயந்திர வாழ்க்கைக்கு பழக்கப்படல், பாரம்பரிய பண்பாட்டு அம்சங்களை கைவிடல், சமூக வலைத்தளங்களின் அதிகரித்த பாவனை, இயற்கை அனர்த்தங்கள், யுத்த நடவடிக்கைகள் போன்ற காரணங்களால் இன்று அழிவடைந்து வருகின்றன. அந்த வகையில் இவ்வாய்வுப் பிரதேசமான தென்மராட்சியில் அமைந்துள்ள சரசாலைக் கிராமத்தின் தனித்துவமான மரபுரிமை அம்சங்களினை ஆராய்ந்து

இனங்கண்டு, அவற்றை ஆவணப்படுத்துவதும், அவற்றை பாதுகாப்பது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். மேலும் இக்கிராமத்தில் மறக்கப்பட்டு வரும் மரபுரிமை அம்சங்களையும், மறக்கப்பட்டு வருவதற்கான காரணங்களையும், பேணிப் பாதுகாத்து வருவதற்கான காரணங்களையும் இனங்காண்பதும் இவ்வாய்வின் இன்னொரு நோக்கமாகும். இவ்வாய்வு நோக்கத்தினை நிறைவு செய்யும் பொருட்டு, ஆய்வுக்குரிய தரவுகள் களஆய்வின் ஊடான நேரடி அவதானிப்புகள் ஊடாகவும், நேர்காணல் மற்றும் கலந்துரையாடல்கள் மேற்கொள்வதன் ஊடாகவும் பெறப்பட்டுள்ளன. மேலும் இரண்டாம்நிலைத் தரவுகள் ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய கட்டுரைகள், நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளில் இருந்தும் பெறப்பட்டுள்ளன. இந்தவகையில் இக்கிராமத்தில் குருவிக்காட்டு இயற்கைக் கண்டல் தாவரப் பகுதி, பாரம்பரிய வீடுகளான நாற்சார் வீடுகள், தலைவாசல் வீடு, திண்ணை வீடு, ஆவுரஞ்சிக் கற்கள், பாரம்பரிய வேலியமைப்பு முறைகள், உணவுப் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள், ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத ஆலயங்கள், பழக்கவழக்கங்கள், பேச்சுவழக்கு மொழிநடைகள், நம்பிக்கைகள், சடங்கு சம்பிரதாயங்கள், பாரம்பரிய பாவனைப் பொருட்கள் போன்றனவற்றை தனித்துவமான மரபுரிமை அம்சங்களாக அடையாளப்படுத்தமுடிகின்றது. அவ்வகையில் பாரம்பரிய பாவனைப் பொருட்கள் மற்றும் பண்பாட்டு அம்சங்களின் முக்கியத்துவங்களை உணர்த்தும் வகையிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களாக கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள் என்பவற்றை மேற்கொள்ளுதல். மரபுரிமை அம்சங்கள் பற்றிய முக்கியத்துவங்களை மாணவர்களிடையே கொண்டு சேர்த்தல், பாடசாலைக் கல்வியில் மரபுரிமைகளின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலான பாடத்திட்டங்களை அரசு கொண்டுவருதல், இங்குள்ள இயற்கை சார்ந்த, கலாசாரம் சார்ந்த மரபுரிமை அம்சங்களை அழிவடையாது பேணிப் பாதுகாத்து, அவற்றை சுற்றுலா ரீதியாக அணுகுதல், மரபுரிமைப் பாதுகாப்பு அமைப்புகளை உருவாக்கி அவற்றின் ஊடாக மரபுரிமைப் பாதுகாப்பு செயற்றிட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் ஊடாக இக்கிராமத்தின் தனித்துவமான மரபுரிமை அம்சங்களினை ஓரளவேனும் பாதுகாக்க முடியும்.

**திறவுச்சொற்கள்:** சரசாலை, மரபுரிமை அம்சங்கள், பராம்பரிய பண்பாடுகள், குருவிக்காடு.